செ.வெ.எண் : 20/ஜூலை நாள் : 10.07.2017

# இராமநாதபுரம் மாவட்டம்

## கருணை அடிப்படையிலான பணி நியமன ஆணைகளை

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் வழங்கினார்

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (10.07.2017) நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்களைப் பெற்று, அதன்பின்பு பணியின் போது மரணமடைந்த 2 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையிலான பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன், இ.ஆ.ப.,அவர்கள் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து வருகை தந்த பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்களைப் பெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், அம்மனுக்களை ஆய்வு செய்து விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு தீர்வு காண வேண்டும் என சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களை அறிவுறுத்தினார்.

தொடர்ந்து, வருவாய் துறையில், பரமக்குடி வட்டாட்சியர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து பணியிடை மரணம் அடைந்த திரு.செல்வராஜ் அவர்களின் மகன் திரு.செல்வ ஹரீஷ் மற்றும் கடலாடி வட்டாட்சியர் அலுவலகத்தில் முதுநிலை உதவியாளாராக பணிபுரிந்து பணியிடை மரணமடைந்த திரு.ஞானசேகரன் அவர்களின் மகள் திருமதி.சத்யா ஆகியோர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.சி.முத்துமாரி, சமூகபாதுகாப்பு திட்ட தனித்துணை ஆட்சியர் திரு.என்.எஸ்.பாலசுப்பிரமணியன் உள்பட அரசு அலுவலர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**